# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 40 /2022 |
| Deposition of witness | | PW- 4 /LW- 5 |
| Name | | திரு. தனகுமார் |
| Father's/Husband Name | | திரு. சந்திரசேகர் |
| Village | | அதிராம்பட்டிணம் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 41/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of October 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பட்டுக்கோட்டை தாலுக்கா அதிராம்பட்டிணம் சுப்பிரமணியன்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது ே ஹாட்டல் வியாபாரம் செய்து வருகிறேன், இதற்கு முன்பு நான் அதிராம்பட்டிணம் பஸ்டாண்டில் கார் ஓட்டுநராக இருந்தேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் என் பக்கத்து தெருவை சேர்ந்தவர். எதிரிகளை தெரியும் எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அது **அசாஆ.3** ஆகும். மேற்படி கையெழுத்தை சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு என் சொந்த வேலையாக அதிராம்பட்டிணம் காவல்நிலையம் சென்ற போது போலிசார் எழுதாத வெள்ளை தாளில் வாங்கினார்கள். அசா1 எதிரிகள் மீது கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியாது. என் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 31.08.2019 ந் தேதி காலை 09.30 மணிக்கு நானும் என்னுடன் கார் ஓட்டுநராக பணிபுரிந்த மாரிமுத்து என்பவரும் எங்கள் கார் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தோம் என்றும் அப்போது 0.08.2019 ந் தேதி இரவு பாரி மளிகை கடையில் அசா1க்கும் எதிரிகளுக்கும் இடையே நடந்த பிரச்சனை சம்பந்தமாக அதிராம்பட்டிணம் கா.நி போலிசார் வழக்கு பதிவு செய்து வழக்கின் சம்பவ இடத்தை எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சிகயாக கையெழுத்து போட்டோம் என்றும், அந்த பார்வை மகசர் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரிகள் தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/– திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை